

கிருஷ்ணகிரி நகராட்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, 2ம் கட்டமாக ரூ.49 கோடியே 86 இலட்சம் மதிப்பில் பாதாள சாக்கடை திட்டம் பணியை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிவராசு மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு பேரூராட்சிகள் துறை இயக்குநர் கிரண் குராலா, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம் எல் ஏ, கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டி. செங்குட்டுவன், இ.ஜி சுகவனம், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , நகரமன்ற தலைவர் பரிதாநவாப் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் அன்னசாகரம் பகுதியில் உள்ள நெசவாளர்களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேரில் சந்தித்து அவர்களது குறைகள் கேட்டறிந்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ தடங்கம்.பெ.சுப்ரமணி,மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர். பி.பழனியப்பன் மற்றும் துறை அதிகாரிகள்,கழகத்தினர்.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கிள்ளுக்கோட்டை வருவாய் கிராமத்தில் நடைபெற்ற ”மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், துணை மேயர் எம்.லியாகத் அலி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர்.அ.அக்பர்அலி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, குன்றாண்டார்கோவில் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நீலகிரி மாவட்டம், உதகை தெற்கு ஒன்றியம் தேவர்சோலை பகுதியில் நடைபெற்ற கழக கொடியேற்று விழா நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் – அரசு கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### வரலாற்றிலேயே இல்லாத வகையில்

# தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக ‘காலை உணவுத் திட்டம்’!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி பேச்சு!

திருவெறும்பூர், டிச.23-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்த நாளை விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது

மேலும் இதன் ஒரு பகுதியாக திருச்சி தெற்கு மாவட்டம் , திருவெறும்பூர் பகுதி கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது, இந்த பொதுக்கூட்டத்திற்கு திருவெறும்பூர் பகுதி கழகச் செயலாளர் சிவக்குமார் தலைமை வகித்தார் மேலும் இந்த பொதுக்கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யா மொழி,மாநகர செயலாளர் மதிவாணன் மற்றும் திமுக மாணவர் அணி தலைவர் ராஜீவ் காந்தி, தலைமை கழக பேச்சாளர் காசிநாதன்



ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மேலும் இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், மூக்கன், லிலாவேலு, துனைமேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், மற்றும் கழக நிர்வாகிகள் சோமகுணநிதி, விஜயபாலன், அருண்குமார், கண்ணதாசன் மற்றும் மாவட்ட, நகர பகுதி, கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் உரையாற்றியதாவது, நாம் உழைத்து ஒன்றிய அரசிற்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம் என்றால் அவர்கள் நமக்கு திருப்பிக் கொடுப்பது வெறும் 29 பைசா தான் என்று எடுத்துரைத்தார் இன்று யாருடைய பிறந்த நாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்றால் குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கொண்டுவரக்கூடிய ஒவ்வொரு திட்டத்திற்கெல்லாம் அவருடைய கரத்தை வலுப்படுத்தும் விதமாக நிர்வாக ரீதியாக தொடர்ந்து அந்த பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு முதல்வர் கொண்டுவரக்கூடிய கட்டணமில்லா பேருந்து மகளிர் உரிமை தொகை , செல்வமகள் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் ஆகிய திட்டமாக இருந்தாலும் சரி மேலும் இதற்கு ஒரு படி மேலே கூற வேண்டும் என்றால் வரலாற்றிலேயே இல்லாத வகையில் முதல் முறையாக காலை உணவு திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 20 லட்சத்து 73 ஆயிரத்து 536 குழந்தைகள் உணவு உண்டு பள்ளிக்கு செல்கிறார்கள் என்றால் அதற்கு காரணமாக இருக்கக் கூடிய தமிழக முதல்வரின் திட்டங்களை கையாள நிர்வாக ரீதியாக கையாளக்கூடிய ஒருவர் யார் என்றால் அது துணை முதல்வர் தான் என்றும் ஒரு உழைப்பாளியாக தமிழகம் முழுவதும் சுழன்று வருகிறார் என்றால் அது துணை முதல்வர் தான் என்றும் அப்படிப்பட்டவரின் பிறந்த நாளை தான் இன்று நாம் கொண்டாடி வருகிறோம் என்றும் மேலும் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு 13 மாநகராட்சி உள்ளடக்கிய திருவெறும்பூர் தொகுதிகள் நேரடியாக மக்களை சந்தித்து அவர்களிடம் மனுக்களை பெற்றோம் அதில் வீட்டுமனை பட்டா கலைஞர் உரிமைத்தொகை ஆகியவைதான் அதிகமாக இருந்ததாகவும் அனைத்து மனுக்களையும் முதல்வர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கி விட்டதாகவும் அந்த மனுக்களை முதல்வர் யாரிடம் ஒப்படைப்பார் என்றால் துணை முதல்வரிடம் தான் மேலும் துணை முதல்வர் எங்கு சென்றாலும் இது வரை கலைஞர் உரிமைத் தொகை தமிழக முழுவதும் ஒரு கோடியே 55 லட்சம் பேர் விண்ணப்பித்து உள்ளதாகவும் தற்பொழுது ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு வழங்கிய வருவதாகவும் மேலும் அனைவருக்கும் விரைவில் வழங்கப்படும் என உறுதி அளித்து வருகிறார் என்றும் கூறினார் மேலும் மக்களுக்கு மழையால் வெள்ளத்தால் பாதிக்கப்படும் பொழுது ரெயின் கோட்டை அணிந்து தமிழக முதல்வரும் அவருக்கு உறுதுணையாக துணை முதல்வரும் வெள்ளத்தை நேரடியாக பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி வருவதாகவும் சென்னையில் மட்டும் தான் துணை முதல்வர் மழை வெள்ளத்தை பார்வையிட்டாரா என்றால் இல்லை கடலூர் விழுப்புரம் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு சென்றும் நேரில் மக்களை சந்தித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறியவர் தான் துணை முதல்வர் என்றும், ஒன்றியத்தில் ஆளும் பாஜக அரசாணை நாம் உழைத்து ஒரு ரூபாய் கொடுப்பதாகவும் ஆனால் அவர்கள் நமக்கு திருப்பி வெறும் 29 பைசா மட்டுமே கொடுப்பதாகவும் மீதமுள்ள தொகையை வேறு மாநிலங்களுக்கு செலவிடுவதாகவும் எடுத்துரைத்தார் .



கோவை மாவட்டம், சூலூர் ஒன்றியம், நீலாம்பூர் ஊராட்சி துவக்கப்பள்ளி துணைக் கட்டிடம் மற்றும் சத்துணவுக் கூடத்தை தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார். உடன் .கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் ஆலோசனைக்கிணங்க இனமான பேராசிரியர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவரின் திருவுருப் படத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மலர் தூவி வணங்கி இனிப்புகளை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மாவட்ட துணை செயலாளர்கள் தயா.இளந்திரையன், இரா.கற்பகம் , நகரச் செயலாளர் இரா.சக்கரை, உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### ஆசிரியர்கள் சொல்லித் தரும்

# ஒழுக்கத்தையும் பண்பையும் மாணவர்கள் கற்றுக் கொள்ளுங்கள்!

## ரிஷிவந்தியத்தில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேச்சு!

ரிஷிவந்தியம்,டிச.23-

ஆசிரியர்கள் சொல்லித் தரும் ஒழுக்கத்தையும், பண்பையும் கற்றுக் கொண்டாலே மாணவர்களுக்கு கல்வி தானாக வந்து விடும் என கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதிக்கு உட்பட்ட பாவந்தூர், சித்தால், சித்தேரிப்பட்டு ஆகிய அரசுப் பள்ளிகளில் நடைபெற்ற விழாவில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இதில் பழைய சிறுவாங்கூர் ஊராட்சி சித்தேரிப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ பேசுகையில் ஏழை எளிய மக்கள் ஒரு பெரிய நோக்கத்துடன் தங்கள் குழந்தைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்கின்றனர், அதாவது தங்கள் வறுமை நிலை மாற வேண்டும்,தங்கள் குழந்தைகள் நிலை உயர வேண்டும், தங்கள் குழந்தைகள் ஒருமருத்துவராக, பொறியாளராக,ஏன் ஆசிரியராக வரவேண்டும் என்ற நோக்கத்துடன், தங்களை தினம் தினம் வருத்திக் கொண்டு,தங்கள் குழந்தைகளை மிகவும் கஷ்டப்பட்டு படிக்க வைக்கின்றனர்,அதே போல் பள்ளியில் அந்த ஆசிரியர் எனக்கு பிடிக்கல, இந்த ஆசிரியர் எனக்கு பிடிக்கல, அந்த ஆசிரியர் சரியா பாடம் எடுக்கல, இந்த ஆசிரியர் சரியா பாடம் எடுக்கலுன்னு மாணவர்கள் சொல்லி கேட்டிருப்போம்,ஆனால் இந்த மாணவனை எனக்கு பிடிக்கல, அந்த மாணவனை எனக்கு பிடிக்கலன்னு எந்தவொரு ஆசிரியரும் சொல்லி இதுவரை நாம் கேட்டிருக்க மாட்டோம், ஒவ்வொரு நாளும் காலை 9 மணிக்கு பள்ளிக்கு வந்து மாலை 5 மணி வரை மாணவர்களோடு இருந்து ஆசிரியர்கள் போராடுவது என்பது மிகவும் கடினம்,

ஒரு ஆண்டில் 300 நாட்கள் ஆசிரியர்கள் மாணவர்களோடு இருக்கின்றனர் என்பதை பெற்றோர்கள் நினைத்து பார்க்க வேண்டும், எந்தவொரு ஆசிரியரும் இன்றைக்கு பள்ளிக்கு லீவு விட வேண்டும் என்று



யாரும் நினைப்பது கிடையாது, அப்படிப்பட்ட ஆசிரியர் பெருமக்களை மாணவர்கள் மதித்து அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும், அவர்களுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும், மாணவர்கள் தேர்வில் மதிப்பெண் எடுப்பது ஒருபுறம், மறுபுறம் ஒழுக்கமான, பண்பான மாணவர் என்ற பெயரை வாங்கினாலே கல்வி தானாக வந்துவிடும், அதை நோக்கி மாணவர்கள் தங்கள் பயணத்தை தொடங்க வேண்டும், நமது திராவிட மாடல் நல்லாட்சியில் தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு எண்ணற்ற சிறப்பு வாய்ந்த திட்டங்களை கொண்டு வந்துள்ளார்,அந்த திட்டங்களில் காலை உணவு திட்டம் உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்குகிறது, மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டத்தின் மூலம் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயிலும் அனைவருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற உன்னதமான திட்டம் இந்தியாவிலேயே வேறு யாரு செய்திட முடியும்,அதுபோல் நான் முதல்வன் திட்டம் இது போன்ற எண்ணற்ற திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம் ஆகவே இது போன்ற அருமையான திட்டங்களை மாணவ மாணவிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று எடுத்துரைத்து பேசி அறிவுரை வழங்கினார்.

இவ்விழாவில், ரிஷி வந்தியம் ஒன்றியக் குழுத் தலைவர் வடிவுக்கரசி சாமி சுப்பிரமணியன், ஒன்றிய கழக செயலாளர் எம்.பெருமாள், மாவட்ட கவுன்சிலர், மாவட்ட கழக பொருளாளர் ஆதி.கு.கோவிந்தராஜ். ஒன்றிய கவுன்சிலர்கள் ஆனந்தராஜ்,அகிலா பாண்டுரங்கன், ஊராட்சி மன்ற தலைவர் செல்வி பால்ராஜ்,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் ராஜி. சுந்தர்ராஜன், சூளாங்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் கோமதி சுரேஷ், பள்ளிப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ரத்தினம், கலை இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எல்.ஜி.செந்தில் மற்றும் தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் எஸ். கே.நவாப் ஏற்பாட்டில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே புனரமைக்கப்பட்ட அண்ணா சிலையை கழக முதன்மைச் செயலாளரும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என்.நேரு, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் கழக கொடி ஏற்றி, பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் அவர்களது பிறந்த நாளையொட்டி 147 கிலோ கேக் வெட்டி நகர தி.மு.க. சார்பில் தையல் எந்திரம், சலவைப்பெட்டி உள்ளிட்ட 10 லட்சம் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகள் ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவை தலைவர் நாகராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி. முருகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கோவை வையம்பாளையத்தில் உள்ள உழவர் தலைவர் அய்யா நாராயணசாமி அவர்களின் 40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க.செயலாளர் நா.கார்த்திக் வடக்கு மாவட்டச் செயலாளர் தொஅ.ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டு, அவரது நினைவிடத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பின்னர் அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் எஸ்.எஸ். குளம் பேரூராட்சி துணை தலைவர் மணி,எஸ்.எஸ்.குளம் ஒன்றியச் செயலாளர் சுரேஷ் குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் சோமு, சந்தோஷ், கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு, வடக்கு மாவட்ட பொருளாளர் ரகுமான், அன்னூர் ஒன்றிய செயலாளர் தனபால், தலைமை செயற்குழு உறுப்பினர் டிபி.சுப்பிரமணியன், அயலக அணி பார்த்திபன் பேரூர் கழக செயல்வீரர்கள் ஜனார்த்தனன்,சுரேந்திரன்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.